

# பொதுப்பணித் துறை

மானியக் கோரிக்கை எண். 39 & 40

## அறிவிப்புகள்

## 2011 - 2012

# பொதுப்பணித் துறை

**மானியக் கோரிக்கை எண். 39 & 40**
(கட்டடம் மற்றும் பாசனம்)

# அறிவிப்புகள்
# 2011–2012

கே.வி. இராமலிங்கம்
பொதுப்பணித்துறை அமைச்சர்

# 1. செயற்கை முறையில் நிலத்தடி நீரை செறிவூட்டும் பெருந்திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, செயற்கை முறையில் நிலத்தடி நீரை செறிவூட்ட தடுப்பு அணைகள், கசிவுநீர் குட்டைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் துளைகள் போன்ற **102** கட்டுமானங்களை ரூபாய் **49.00** கோடி மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தவும், நிலத்தடி நீர் இருப்பை மேம்பாடு செய்யவும் இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

## 2. நபார்டு நிதியுதவியுடன் அணைக்கட்டுகளைச் சீரமைத்தல்

(அ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலின் பேரில், அமராவதி ஆற்றின் குறுக்கே உள்ள பழைய அணைக்கட்டுகள், ரூபாய் **18.00** கோடி மதிப்பீட்டில், **15,202** ஏக்கர் பாசனப்பரப்பு பயனடையும் வகையில் புனரமைக்கப்படும்.

(ஆ) கடலூர் மாவட்டம், மணிமுக்தா நதியின் குறுக்கே உள்ள விருத்தாச்சலம் அணையினை, ரூபாய் **13.00** கோடி மதிப்பீட்டில், **6,257** ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில், நடப்பாண்டில் சீரமைக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(இ) மதுரை மாவட்டத்தில் பழுதடைந்த அணைக்கட்டுகள் மற்றும் அவற்றின் வழங்கு கால்வாய்களில், ரூபாய் **20.00** கோடி

மதிப்பீட்டில் **19,774** ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் புனரமைப்புப் பணிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின் பேரில் மேற்கொள்ளப்படும்.

(ஈ) தேனி மாவட்டத்தில், மேல்மங்கலம், ஜெயமங்கலம் வழங்கு கால்வாய்கள் மற்றும் மஞ்சளாறு பிரதானக் கால்வாயை, ரூபாய் **10.51** கோடி மதிப்பீட்டில், **3,732** ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் நவீனப்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(உ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலின் பேரில், கடலூர் மாவட்டம், பெரிய ஓடையின் குறுக்கே ரூபாய் **5.50** கோடி மதிப்பீட்டில் **1,700** ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் படுகை அணை (Bed Dam) கட்டப்படும்.

(ஊ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அனுமதியின் பேரில், காஞ்சிபுரம் மாவட்டம், செம்பூண்டியில் உள்ள அணைக்கட்டு ரூபாய் **2.20** கோடி மதிப்பீட்டில் **283** ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் சீரமைக்கப்படும்.

(எ) வேலூர் மாவட்டம், மோர்தானா வலது பிரதானக் கால்வாயில் ரூபாய் **1.40** கோடி மதிப்பீட்டில் **2,086** ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(ஏ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, தருமபுரி மாவட்டம், கல்லார் ஆற்றின் குறுக்கே உள்ள **16** அணைக்கட்டுகள் ரூபாய் **2.15** கோடி மதிப்பீட்டில், **1,298** ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில் சீரமைக்கப்படும்.

## 3. நபார்டு நிதியுதவியுடன் பாசனக் கட்டுமான அடைப்பான்களைச் சீரமைத்தல்

(அ) திண்டுக்கல் மாவட்டம், அணைப்பட்டி பெரியாறு பிரதானக் கால்வாய் அடைப்பான்கள் ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி சீரமைக்கப்படும்.

(ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலுடன், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில், கீழ்பவானி கால்வாயின் அடைப்பான்கள் ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

## 4. நபார்டு நிதியுதவியுடன் ஏரிகளை புனரமைத்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஏரி ரூபாய் 2.30 கோடி மதிப்பீட்டில், 109 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் புனரமைக்கப்படும். மேலும், 207 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் மற்ற ஐந்து ஏரிகளுக்கு வழங்கு கால்வாய்கள் அமைக்கப்படும்.

## 5. தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்கள் புனரமைத்தல்

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், நெல்லித்துறை அணைக்கட்டினை ரூபாய் 40.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், மதுரை மாவட்டம், பெரியாறு பிரதான கால்வாயினை ரூபாய் 2.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க ஆணையிட்டுள்ளார்கள்.

(இ) தஞ்சாவூர் மாவட்டம், சென்னம்பட்டி கிராமத்திலுள்ள கீழப்புடையன் ஏரி, புதுக்குடி கிராமத்திலுள்ள கிள்ளுக்குடி பீமன் ஏரி மற்றும் பழையப்பட்டி கிராமத்தின் பழைய ஏரி ஆகியவற்றை ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(ஈ) விழுப்புரம் மாவட்டம், இராமராஜபுரம் அணைக்கட்டு, வழங்கு கால்வாய் மற்றும் அதன் உட்கட்டமைப்புகளை ரூபாய் 2.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(உ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், திருவாரூர் மாவட்டம், பாமினி ஆற்றின் குறுக்கே ரூபாய் **75.00** இலட்சம் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

## 6. புதிய பாலம் அமைத்தல்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கீழ்பவானி பிரதானக் கால்வாயின் குறுக்கே ரூபாய் **60.00** இலட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம் நடப்பாண்டில் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 7. வாகனங்கள் கொள்முதல் செய்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களது ஆணையின்படி, பொதுப்பணித் துறையின் உபயோகத்திற்காக **50** புதிய வாகனங்கள் ரூபாய் **258.88** இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

## 8. ஆய்வுக் கருவிகள் கொள்முதல் செய்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க, சென்னை தரமணியில் உள்ள தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி மையத்தின் சோதனைக் கூடத்திற்கு ஆய்வுக் கருவிகள் ரூபாய் **29.00** இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

## 9. நூலக அரங்கு புதுப்பித்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க, சென்னை, சேப்பாக்கம் வளாகத்தில் உள்ள கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டத்தின் நூலக அரங்கு ரூபாய் **26.00** இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

## 10. புதிய குடியிருப்புகள் கட்டுதல்

கோயம்புத்தூர், திருநெல்வேலி, சிதம்பரம் மற்றும் திருச்சி பொதுப்பணித் துறை வளாகங்களில், ரூபாய் **78.05** இலட்சம் மதிப்பீட்டில் பொறியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க மேற்கொள்ளப்படும்.